கல்குடா கல்வி வலய வலநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (இ/த) – 2018 ஆனி

தரம்: 12 (2019)	தவணை: 03	நாடகமும் அரங்கியலும்	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி - I

சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) உலக அரங்கின் தொட்டில் என அழைக்கப்படும் அரங்க மரபு.
(01) இத்தாலிய அரங்கு (02) கிரேக்க அரங்கு (03) உரோம அரங்கு
(04) சீன அரங்கு (05) ஜப்பானிய அரங்கு

02) தான் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்க வைப்பதே கலை" எனக் கூறியவர்.
(01) எரிக் நியூட்டன் (02) ககல் (03) அரிஸ்ரோட்டில்
(04) குரேசே (05) கேகல

03) இசையை பிரதானமாகக் கொண்ட கலை வடிவம்
(01) நடனம் (02) பலே (03) நாடகம் (04)ஒபேரா (05)கரகம்

04) தனக்கு பயன் ஏதுமின்றி தலைவனின் விருப்பத்திற்காக கற்பனை செய்யப்படுவது.
(01) பிரகரி (02) பதகா (03) பிந்து (04) பிஜ (05) கார்ய

05) கோடை நாடகம் எழுதப்பட்ட ஆண்டு.
(01) 1930 (02) 1969 (03) 1989 (04) 1966 (05) 1979

06) ஜப்பானில் நாடகத் தோற்றத்திற்கான சடங்கு என நம்பப்படுவது.
(01) டயோனீசியஸ் சடங்கு (02) பாடுகளின் சடங்கு (03) தொவில் சடங்கு
(04) ஈஸ்டர் வழிபாடு (05) சம்போசா சடங்கு

07) பின்வருவனவற்றில் மாதவியின் பதினொரு ஆடல்களில் உட்படாத ஆடல்.
(01) கொடுகொட்டி (02) பாண்டரங்கம் (03) நவீன நாடகம்
(04) மல் (05) அல்லியம்

08) பின்வருவனவற்றில் இலங்கையின் வடபுலத்தில் மட்டும் ஆடப்படும் கூத்து மரபு.
(01) வட மோடி (02) காத்தவராயன் (03) மகிடிக் கூத்து
(04) வசந்தன் கூத்து (05) தென்மோடி

09) உலக புகழ் பெற்ற அன்னத் தடாகம் (swan lake) எனும் நாடகம் எவ்வகையைச் சார்ந்தது?
(01) ஒப்பேரா (02) நூர்த்தி (03) கதகளி (04) பலே (05) ரஜடி

10) பின்வருவனவற்றில் இன்றியமையாத வகையில் தொழினுட்ப சாதனங்களுடன் தொடர்புபடாத கலை வடிவம்.
(01) சினிமா (02) வானொலி நாடகம் (03) தொலைக்காட்சி நாடகம்
(04) அனிமேசன் திரைப்படம் (05) தெருவெளி நாடகம்

11) Ekkyklema என்பது.
(01) தெய்வம் தருகருவி (02) பாத்திர வரவு (03) ஒலி எழுப்புதல்
(04) இறந்தோர் உடல் காவும்பொறி (05) பாடப்படும் பொருள்

12) ஸ்ரீ ஹர்சனின் நாடகப் படைப்பு அல்லாதது.
(01) ரத்னாவளி (02) பிரியதர்சிகா (03) மிருச்ச கடிகம் (04) நாகாநந்தம் (05) சாகுந்தலம்

www.lkedu.lk

13) சமயக்கரணங்கள் நாடக அம்சங்களை கொண்டுள்ளன.இதிலிருந்து மக்கள் அரங்கு தோன்றி இருக்க வேண்டும்'.எனக் கூறியவர்.
(01) ஜேன் ஹறீசன் (02) தொம்சன் (03) பேரா.கா.சிவத்தம்பி
(04) றிட்ஜ்வே (05) பேரா.எதிரிவீர சரச்சந்திரா

14) வி.வி.வைரமுத்து பிரபல்யம் அடைந்த நாடக வகை.
(01) கூத்து (02) இசைநாடகம் (03) வில்லுப் பாட்டு (04) நவீன நாடகம் (05) ஒயிலாட்டம்

15) றிச்சட் செக்னர் தமது சூழலில் அரங்கினை தோற்றுவிக்கப் பயன்படுத்திய சடங்கு.
(01) டயோனீசியஸ் சடங்கு (02) களவேள்வி (03) ராமலீலா
(04) சம்போஷா சடங்கு (05) திருப்பாடுகளின் சடங்கு

16) திருவெம்பாவையுடன் தொடர்புடையதாக கருதப்படுகின்ற சங்ககால சடங்கு.
(01) வேலன் வெறியாட்டம் (02) வேட்டுவவரி (03) குன்றக்குரவை
(04) களவேள்வி (05) தை நீராடல்

17) வீரம்,தன்மானம் என்ற குணம்சங்களை மையமாக வைத்து பின்னப்பட்டுள்ள நாடகம்.
(01) எந்தையும் தாயும் (02) இராவணேசன் (03) விழிப்பு (04) கோடை (05) அபசுரம்

18) சிலப்பதிகாரம் கூறும் அரங்கில் கரந்துவரல் எழினி எனப்படும் திரை.
(01) ஒரு புறமிருந்து வருவதாகும். (02) இருபுறமும் இருந்து வந்து நடுவில் இணைவதாகும்.
(03) மேலிருந்து கீழே இறங்குவதாகும் (04) மேடையின் பின் புறமிருந்து வருவதாகும்.
(05) நிரந்தரமாக தொங்கவிடப்படுவது.

19) திவ்விய புராணத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகம்.
(01) கோடை (02) ஒதெல்லோ (03) எலெக்சா (04) ஈடிபஸ் (05) அகமென்னம்

20) பின்வருவோரில் ஈழத்தின் வில்லிசைக் கலையுடன் தொடர்புபட்ட கலைஞர்
(01) நடிகமணி வைரமுத்து (02) ருக்குமணி அருண்டேல் (03) சின்னமணி
(04) பாலாமணி அம்மையார் (05) மௌனகுரு

21) இசைநாடகத்தில் பயன்படுத்தப்படும் பிரதான வாத்தியக் கருவி.
(01) ஹார்மோனியம் (02) உடுக்கு (03) வயலின் (04) மேளம் (05) நாதஸ்வரம்

22) சமஸ்கிருத அரங்கில் அரங்க நிர்மாணி.
(01) விஸ்வகர்மா (02) கட்டியங்காரன் (03) அண்ணாவியார்
(04) பெத்தேகுரு (05) நெறியாளர்

23) தெஸ்பியன் வண்டில் என்ற கலைச் சொல் குறிப்பது.
(01) தெஸ்பிஸின் சிறப்புக்கள் (02) அரங்கப் பொருட்கள் (03) ரஜமயின் இலக்கணம்
(04) நடிப்புக் கொள்கைகள் (05) அரங்க வரலாறு

24) இந்த மனிதனின் செய்தியைக் கேளுங்கள் அதைக் கேட்ட பின் புகழ் பூத்த நிமித்தங்களுக்கு என்ன நடந்து விட்டது என்பதைச் சொல்லுங்கள்'' என்று கூறும் நாடகப் பாத்திரம்.
(01) இடிப்பஸ் (02) இரையோன் (03) கோரஸ் (04) ஜொகஸ்ரா (05) தெய்ரீரியஸ்

25) Romance என்பது.
(01) கடுமையான ஒழுக்கப் பண்பு (02) நீதியைக் கடைப் பிடித்தல்
(03) யதார்த்தத்தைப் பொருட்படுத்தாத காதல் (04) உள்ளதை உள்ளவாறு கூறுதல்
(05) உணர்ச்சி முனைப்புறுதல்

26) உலகளாவிய ரீதியில் நாடக அரங்கம் பற்றி வெளிவரும் தமிழ் மொழி மூலமான இதழ்
(01) கூத்தரங்கம் (02) கட்டியம் (03) ஆற்றுகை (04) நிகழ்கலை (05) அரங்கம்

27) பேராசிரியர் சு.வித்தியானந்தரின் கூத்துப் புத்தாக்கச் செயற்பாட்டிற்கு உதவியாக இருந்த அண்ணாவியார்.
(01) நாகமணிப்போடி (02) சீனித்தம்பி (03) சிவத்தம்பி (04) செல்லையா (05) பாலகப்போடி

www.kalvi.lk

28) எந்தையும் தாயும் நாடகம் முதன்முதலில் நிகழ்த்தப்பட்ட அரங்கு.
(01) வட்டக்களரி (02) திறந்த வெளி (03) படச்சட்ட மேடை
(04) கொட்டகை (05) நாற்சார் அரங்கு

29) அரசனின் புத்தாடை'எனும் நாடகத்தின் ஆசிரியர்.
(01) சி.மௌனகுரு (02) கு.ம.சண்முகலிங்கம் (03) ஜெயசங்கர்
(04) நி.நித்தியானந்தன் (05) வேலுசரவணன்

30) கேட்டுக் கொண்டிருக்கும் நேயரின் மனமேடையிலே நிகழும் நாடக வடிவம்
(01) தொலைக்காட்சி நாடகம் (02) சினிமா (03) வானொலி நாடகம்
(04) மேடை நாடகம் (05) இசை நாடகம்

31) பாரதத்தின் சேக்ஸ்பியர் என அழைக்கப்படுபவர்
(01) பரதர் (02) காளிதாசன் (03) சூத்திரர் (04) கண்ணதாசன் (05) சங்கரதாஸ் சுவாமிகள்

32) படச்சட்ட மேடையின் பிரிவுகள்.
(01) 08 (02) 04 (03) 12 (04) 02 (05) 15

33) பின்வரும் பாத்திரங்களில் காத்தவராஜன் கூத்தில் இடம் பெறாத பாத்திரம்
(01) வல்லாத்து மாங்காளி (02) தொட்டியத்துச் சின்னான் (03)நந்திதேவர் (04)மாரி
(05) ஆரியப்பூமாலை

34) இசை நாடகத்தில் கோப உணர்வை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் ராகம்.
(01) நீலாம்பரி ராகம் (02) முகாரி ராகம் (03) ஆனந்த பைரவி
(04) மோகன ராகம் (05) ஆரபி ராகம்

35) பசியால் உடல் மெலிந்தேன் கொஞ்சம் ருசியாய் அமுதளிப்பாய்'எனும் பாடல் இடம் பெற்ற நாடகம்.
(01) வள்ளியம்மை நாடகம் (02) நல்லதங்காள் (03) சத்தியவான் சாவித்திரி
(04) நந்தனார் கீர்த்தனை (05)அரிச்சந்திர காண்டம்

36) சாமியா எனும் நாடகத்தை எழுதியவர்.
(01) ஈஸ்கிலஸ் (02) சோபோகிறிஸ் (03) அரிஸ்ரோட்டில் (04) மெனாண்டர் (05) யூதிப்பிடிஸ்

37) 'என்றோ ஒரு நாள் இருந்துபார் மாணிக்கம்……"என்னும் பகுதி இடம்பெறும் நாடகம்.
(01) மேடை (02) விழிப்பு (03) எந்தையும் தாயும்
(04) இராவணேசன் (05) உடையார் மிடுக்கு

38) பேரா கு.ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் ஒன்று.
(01) எந்தையும் தாயும் (02) தேவலோகயானை (03) கோடை (04) ஈடிபஸ் (05) சாகுந்தலம்

39) தமிழ்நாட்டின் ஆற்றுகைக் கலை வடிவம்
(01) ரப்பேரா (02) கூத்து (03) பலே (04) தெருக்கூத்து (05) கதகளி

40) சேக்ஸ்பியரின் நாடகங்கள் நடைபெற்ற அரங்கு.
(01) உரோம அரங்கு (02) கபுக்கி அரங்கு (03) குளோப் அரங்கு
(04) கதகளி அரங்கு (05) கிரேக்க அரங்கு

www.keu.lk

பகுதி – II

பிரிவு A யில் இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B யில் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

பிரிவு –A

1) 1. ஆற்றுகைக் கலை வடிவங்கள் 06 தருக. (03 புள்ளிகள்)

2. நாடகம், அரங்கு,ஆற்றுகை என்ற பதங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

3. மேடை நாடகத்தினை வானெலி நாடகம்,தொலைக்காட்சி நாடகம் என்பவற்றோடு ஒப்பிடுக.

(06 புள்ளிகள்)

2) 1. மனோரதிய வாதத்தின் பண்புகளைத் தருக. (03 புள்ளிகள்)

2. மிகையுணர்ச்சி நாடக ஆசிரியர்கள் நால்வரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. தற்கால நாடகமொன்றில் யதார்த்தம், யதார்த்த விரோத அரங்க மரபுகள் பங்களிப்பு செய்யும் முறையை விளக்குக. (08 புள்ளிகள்)

03) பின்வரும் ஆற்றுகை வெளிகள் ஒவ்வொன்றிலும் ஆற்றுவோர்,பார்ப்போர் இடையிலான ஊடாட்டம் எவ்வகையில் அமையும் என்பதனை விளக்குக.

1. வட்டக்களரி

2. படச்சட்ட மேடை

3. சூழலியல் அரங்கு (15 புள்ளிகள்)

பிரிவு –B

04) நாடகத்தின் தோற்றம் சடங்காகும்'

1. சடங்கு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

2. சடங்குகளை தமது அரங்கின் மூலமாக கையாண்ட 04 நவீன நாடக நெறியாளர்களின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

3. நாடகம், சடங்கு ஆகிய இரண்டும் சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் முறைமையின் ஒற்றுமைப் பாடுகளை ஆராய்க. (09 புள்ளிகள்)

05) வீரத்திற்காக இலங்கையின் வீழ்ச்சியை ஏற்ற கதாநாயகனின் அவலமாக விளங்குவது இராவணேசன் நாடகமாகும்.

1. பின்வருவோரின் குணாதிசயங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

1. இராவணன் 2. மண்டோதரி (04 புள்ளிகள்)

2. இராவணேசனில் வெளிப்பட்ட நவீன நாடகப் பண்புகளை எடுத்துரைக்குக. (05 புள்ளிகள்)

3. அரசியல் சமூகச் சூழமைவுகள் நாடகங்களின் பாடுபொருள்களைத் தீர்மானிக்கின்றன என்பர் இராவணேசன் நாடகத் தயாரிப்புக்களினூடாக இக் கூற்றினை ஆராய்க. (06 புள்ளிகள்)

06) பின்வருவனவற்றுள் எவையெனும் மூன்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. இசை நாடகம்
2. ஒளி
3. சூத்திரகர்
4. காமன் கூத்து (15 புள்ளிகள்)

www.lkedu.lk